**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : **திருமதி. ஆ. சீதாலெட்சுமி, எம். ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீ குரோதி வருடம் மார்கழித் திங்கள் 23 -ஆம் நாள்.

**I.A.No.594/2024**

**in**

**O.S.No.13/2013**

கோவிந்தராஜன் .... மனுதாரர் / பிரதிவாதி

// எதிர்//

டாக்டர்.எஸ்.ஆர்.வி.தங்கமணி .... எதிர்மனுதாரர் /வாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உதயகுமார், B.Sc., B.L., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ரவிச்சந்திரன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவில் சாட்சிப் பட்டியலை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ளும்படி அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1, 2-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்** :-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர்/வாதி மனுதாரருக்கு எதிராக விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு வாதியால் பிரதிவாதி தரப்பில் மனுதாரரை

D.W.1 ஆக விசாரிக்கப்பட்டு மனுதாரர் தரப்பு மேற்கொண்டு சாட்சி விசாரணைக்கு வாய்தா போடப்பட்டுள்ளது. வழக்கு சொத்து மனுதாரருக்கு சொந்தமானது என நிரூபிக்க மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சிகள் விசாரிக்க வேண்டியுள்ளது. எனவே இந்த சொத்து ஒன்றாக இருந்தபொழுது மனுதாரரது தகப்பனார் ரெங்கராஜனுக்கும், வாதி தங்கமணிக்கும் இடையே கிரய ஒப்பந்தம், கை லெட்டர் உள்ளிட்ட ஆவணங்கள் வாதியால் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. அதை மனுதாரரது தகப்பனாராகிய ரெங்கராஜனை கொண்டும், சொத்து பத்திரபதிவிற்கு பிற்பாடு மனுதாரரது மூத்த சகோதரர் முருகராஜன் அவர்களால் லாரி எடைபோடும் எடைமேடை மற்றும் டாஸ்மார்க் மற்றும் மதுபானகடை ஆகியவை தாவா சொத்தில் நடத்தப்பட்டு வந்துள்ளது.

மேலும் மனுதாரர் சகோதரர் முருகராஜன் மேற்படி கொத்தை ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட அடமான கடன் பெற்று அதை தீர்த்துள்ளார் மற்றும் மேற்படி சொத்தை பொறுத்து மனுதாரர் மன்னார்குடி நகரட்சியிடம் வரைபட அனுமதி பெற்று சொத்து வரி மற்றும் நகராட்சி வரி வகையறாக்களை செலுத்தி வந்துள்ளார். மேற்படி ஆவணங்கள் மனுதாரரது தகப்பனாரும், சகோதரரும் மனுதாரர் வசம் கொடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணங்களை குறியீடு செய்யவும், சாட்சியம் அளிக்கவும் மனுதாரரது தகப்பனாரான ரெங்கராஜனையும் மூத்த சகோதரரான முருகராஜனையும் மற்றும் வழக்கு சொத்தில் உள்ள கட்டுமானங்கள் பற்றியும், அனுமதி குறித்தும் மன்னார்குடி நகரமைப்பு பொறியாளரையும் சாட்சியாக விசாரிக்க வேண்டியுள்ளது. மனுதாரர் அவர்களிடம் அனுமதி பெற்று சாட்சி பட்டியல தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. ஆகவே இம்மனுவுடன் கொடுத்துள்ள சாட்சிப்

பட்டியலை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3) <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u> :-

மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படியும், உண்மை நிலவரங்கள்படியும் நிலை நிற்கத்தகுந்ததல்ல. ஒப்புக்கொள்ளும் விவரங்களை தவிர மற்றவைகளை எதிர்மனுதாரர்/வாதி மறுதளிக்கின்றார்.

மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கண்டுள்ள நபர்களான ரெங்கராஜன் மற்றும் முருகராஜன் ஆகியோருக்கு எதிராக எதிர்மனுதாரர்/வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி அசல் வழக்கில் இந்த வாதி தரப்பு சாட்சியத்திற்காக போடப்பட்டுள்ளது. மேற்படி நபர்களை இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரணை செய்ய வேண்டும் என்பது ஒவ்வொரு வழக்கிலும் மாறுபட்ட சாட்சியங்களையும் குழப்பதையும் உண்டாக்கக்கூடியதாக இருந்து வரும்.

மேற்படி அசல் வழக்கான 13/2013 மற்றும் 131/2018, 132/2018, 133/2018 ஆகிய வழக்குகளில் Joint trial ஆக விசாரணை செய்யப்பட வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு தள்ளுபடியாகி உள்ளது. மேற்படி அசல் வழக்கு எண்.132/2018 மற்றும் 133/2018 ல் அவர்கள் பிரதிவாதிகளாக இருந்து வரும் நிலையில் மேற்படி பிரதிவாதிகளை இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரணை செய்ய முடியாது. இந்த மனுதாரர்/பிரதிவாதியால் காலத்தை கடத்த வேண்டும் என்பதற்காக அவரது தகப்பனார்

மற்றும் சகோதரர்களை விசாரணை செய்ய வேண்டும் என்று இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரர்/பிரதிவாதியால் வழக்குரையில் காணப்பட்டுள்ள சொத்தானது காலி மனையாக இருந்து வருகிறது என்றும், மனுதாரர்/பிரதிவாதிக்கு சொந்தமான இடத்தில் எவ்வித கட்டிடங்களும் கட்டப்படவில்லை என்றும், காலி மனை வரியும், மன்னார்குடி நகராட்சிக்கு செலுத்தப்படவில்லை என்றும் மனுதாரர்/பிரதிவாதியால் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ள நிலையில் நகரமைப்பு பொறியாளர் அவர்களை சாட்சியாக விசாரணை செய்ய வேண்டும் என்று கேட்டுள்ளது நிலைநிற்கத்தகுந்தல்ல.

மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கோரியுள்ள 1, 2 சாட்சிகள் அவரது தகப்பனார் மற்றும் சகோதரர் ஆவார்கள். மேலும் கட்டாயப்பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணமே செல்லாது என்று வாதியால் பரிகாரம் கோரியுள்ள நிலையில் ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸிஸ் அடமானக் கடன் பத்திரத்தை நிரூபிக்க மேற்படி நபர்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்ய வேண்டும் என்று கோரியுள்ளது சட்டப்படி நிலைநிற்கக்கூடியதல்ல. எனவே மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர் எதிருரையை தாக்கல் தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.**

5) **<u>தீர்வு:-</u>**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** இம்மனுவினை பரிசீலிக்கும் போது, அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்து, எழுவினாக்கள் வனையப்பட்டு, பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி D.W.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரரர்/பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவின் சாட்சி பட்டியலில் கண்டுள்ள நபர்களை விசாரிப்பதற்கு மனு தாக்கல் செய்ய ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னித்து, இம்மனுவை அனுமதிக்கக் கோரி, மனு தாக்கல் செய்துள்ள எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கு எண்.131/2018, 132/2018, 133/2018 வழக்குகளில் பிரதிவாதிகளாக உள்ளார்கள். இவ்வழக்கு எதிர்மனுதாரரின் சகோதரர்/மற்றும் தகப்பனார் என்றும் அவர்களை விசாரிக்க கோரியுள்ள இம்மனு நிலைநிற்கதக்கதல்ல என்று கூறி ஆட்சேபணை தெரிவித்துள்ளனர்.

**5.** மேற்கண்ட வழக்குகளில் உள்ள ஆவணங்களும் இவ்வழக்குகளில் உள்ள எதிர்மனுதாரர்/வாதி செல்லதக்கதல்ல என்று கூறி விளம்புகை செய்ய கோரியுள்ள ஆவணமும் வெவ்வேறானவையாகும். மேலும் மனுதாரர் / வாதி அந்த இடத்தில் கட்டுமானம் கட்டவில்லை என்று கூறியுள்ளார். மாறாக மனுதாரர்/பிரதிவாதி தாவா

சொத்தில் உள்ள கட்டுமானங்கள் குறித்து மன்னார்குடி, நகரமைப்பு பொறியாளரை விசாரிக்க வேண்டும் என கூறியுள்ளார். மேற்கண்ட சங்கதிகள் தொடர்பாக மனுதாரர் தரப்பு சாட்சிகளை விசாரிப்பதன் மூலம் ஒரு முழுமையான தீர்வு காண முடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**6.** இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை. மனுதாரர் தரப்பில் விசாரணை செய்யும் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்புகள் உள்ளது என்பதாலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய ஒரு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டும் நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**6)** முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 07-ம் நாள் செவ்வாய்க்கிழமை அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

ஒம்/- (**A.சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

**இருதரப்பிலும்** : இல்லை

ஒம்/- (**A.சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : **திருமதி. ஆ. சீதாலெட்சுமி, எம். ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீ குரோதி வருடம் மார்கழித் திங்கள் 23 -ஆம் நாள்.

**I.A.No.594/2024**

**in**

**O.S.No.13/2013**

திரு.கோவிந்தராஜன், வயது 45, த/பெ.ரெங்கராஜன், வசிப்பிடம் நெ.13, பெரிய கம்மாளத்தெரு, மன்னார்குடி முன்சிபி மற்றும் டவுன்.

..... மனுதாரர் / பிரதிவாதி

/எதிர்/

டாக்டர் S.R.V.தங்கமணி, வயது 68, த/பெ.வேம்புக்கண்ணு தஞ்சிராயர், இந்து, வசிப்பிடம் பாலகிருஷ்ணன் நகர், மன்னார்குடி முன்சிபி மற்றும் டவுன்.

..... எதிர்மனுதாரர் / வாதி

இம்மனுவில் சாட்சிப் பட்டியலை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ளும்படி அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1, 2-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் : 02.12.2024

மனு கோப்பிற்கு எடுத்த நாள் : 04.12.2024

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உதயகுமார், B.Sc., B.L., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ரவிச்சந்திரன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 07-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்றமுத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A.சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.